NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 29 December 2017

# சமுதாயத்தில் பல பிரிவினரிடையே அதிகரித்து வரும் இடைவெளி: ஆய்வு

இனம், சமயம் ஆகியவை அல்லாது இனி சமுதாயத்தில் மக்கள் இடையே வசதி அடிப்படையில் இடைவெளி அதிகரிக்கக்கூடும் என்று நேற்று வெளியிடப்பட்ட ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

பொது வீடமைப்பில் தங்கும் சிங்கப்பூரர் ஒருவருக்கு தனியார் வீடமைப்புப் பகுதியில் தங்குவோர் இடையே இருக்கும் நண்பர்களின் எண்ணிக்கை ஒன்றைவிடக் குறைவாக உள்ளது என்று கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

உயர்தர பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் சாதாரண பள்ளியில் பயில்வோரும் நெருக்கமாக இருப்பதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் சுமார் 3,000 சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும் கலந்துகொண்டனர். ஆய்வின்படி அவர்கள் தங்களுக்குத் தொடர்புடையவர்களின் பெயரைக் குறிப்பிட வேண்டும். இவ்வாறு பெரிய அளவிலான ஆய்வு நடத்தப்படுவது இதுவே முதன்முறை.

வாழ்க்கைத் தர அடிப்படையில் சமுதாயத்தில் இடைவெளி உள்ளது தெளிவாக தெரியவந்துள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இந்தப் போக்கை மாற்றுவதற்கான கொள்கைகள் தேவை என்பதையும் அவர்கள் கூறினர்.

"இன வேற்றுமையை முன்னிறுத்தி வந்த சமுதாயமாக இருந்த நாம் இப்போது வாழ்க்கைத் தர அடிப்படையிலான சமுதாயமாக மாறியுள்ளோம்," என்று ஆய்வின் மூன்று ஆய்வாளர்களில் ஒருவரான தேசிய பல்கலைக்கழக சமூகவியலாளர் வின்சென்ட் சுவா தெரிவித்தார்.

பல்லின சமுதாயத்தை உருவாக்கிய நாம் இனி வருமானம் அடிப்படையில் உள்ள பல பிரிவினர்களிடையே கலந்து உறவாடுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சிங்கப்பூரர் ஒருவருக்கு சராசரியாக 5.8 நண்பர்கள் உள்ளதாக அறியப்பட்டது. வேறு பாலினம், வயது, இனம், சமயத்தைச் சேர்ந்த ஒரு நண்பரின் பெயரைக் குறிப்பிட முடிந்தாலும் வேறு வாழ்க்கைத் தரத்தைச் சேர்ந்த ஒரு நண்பரின் பெயரை அவர்களால் குறிப்பிட முடியவில்லை என்று கூறப்பட்டது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.